# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR

CC.No.25/2020
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : அமுதா | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of January 2025.

22.01.2025

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் மாவு வியாபாரம் செய்கிறேன். 2019 ம் வருடம் தேதி, மாதம் நினைவில் இல்லை. நான் எனது மகள் ஊரான பட்டுக்கோட்டைக்கு வீட்டின் கதவை பூட்டிவிட்டு சென்றுவிட்டு திரும்ப வந்து வீட்டின் கதவை திறந்து பார்த்தபோது, வீட்டில் இருந்த பொருட்கள் அனைத்தும் சிதறிக்கிடந்தது. பீரோ திறந்து இருந்தது. நான் பீரோவில் வைத்திருந்த ரூ.50,000/– பணம், 4 கிராம் கல் தோடு, 4 கிராம் பூத்தோடு மற்றும் 2 கிராம் மோதிரம் ஆகியவை திருடு போய் இருந்தது.

2) நான் அக்கம் பக்கம் விசாரித்துவிட்டு முதுகுளத்தூர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1).** இரண்டு மாதங்கள் கழித்து போலிசார் எனது நகைகள் கிடைத்து விட்டதாக தகவல் கூறினார்கள். நான் நீதிமன்றத்தில் மனு செய்து எனது நகைகளை பெற்று சென்றேன். என்னிடம் காட்ப்படும் புகைப்படத்தில்

உள்ள நகைகளை தான் பெற்று சென்றேன். **(புகைப்படங்கள் அ.சா.ஆ.2 எண்ணம் 4).** படிவம் 91ல் உள்ள 2 முதல் 4 அயிட்ட சொத்துகள் 1.கல் தோடு 4 கிராம், 2.பூத்தோடு 4 கிராம் 300 மில்லி மற்றும் 3.மோதிரம் 2 கிராம் **(1. கல் தோடு 4 கிராம் அ.சா.பொ.1, 2. பூத்தோடு 4 கிராம் 300 மில்லி அ.சா.பொ.2 மற்றும் 3. மோதிரம் 2 கிராம் அ.சா.பொ.3)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற அன்றே நான் வீட்டிற்கு வந்து பார்த்தேன். நான் பட்டுக்கோட்டையில் இருந்து மதியம் 01.30 மணியளவில் எனது வீட்டிற்கு வந்து விட்டேன். அன்றைய தினமே ஊர் பெரியோர்களை கூட்டிச்சென்று புகார் கொடுத்தேன். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.